## தலைப்பு 114 - போக்குவரத்து அமைச்சு

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

போக்குவரத்து அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் போக்குவரத்து அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 செப்தெம்பர் 24 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு போக்குவரத்து அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) இந்நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டில் போக்குவரத்து அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 மூலதனச் செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கொழும்பு நகர்ப்புற புகையிரதத்தின் செயலாற்றலினை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேற்கொண்ட நேரடி கொடுப்பனவின் காரணமாக போக்குவரத்து அமைச்சின் மற்றும் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுக்கிடையே மீளாய்வாண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியளிப்பு தொடர்பாக ரூபா 147,278,993 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | தவறோ அல்லது பிழையோ அல்லாததுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நேரடிக் கொடுப்பனவு (Direct Payment) திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தினால் அந்த ஆண்டிற்காக கணக்கீடு செய்யப்படாமை, 2019 ஆம் ஆண்டின் இறுதியில் செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட நேரடிக் கொடுப்பனவு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் 2020 ஆம் ஆண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது செயற்திட்ட அலுவலகத்தினால் தமது வரிசை அமைச்சுடன் நிதி ஆண்டின் இறுதித் திகதியில் செலவுகள் மற்றும் கடன்களின் அறிக்கை தொடர்பாக ஒப்பீடு செய்தல் வேண்டும். |

### 1.6.2 கட்டுநிதி மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுநிதி ஒப்பீட்டு கணக்கில் ஏனைய திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ரூபா 7,443,654 தொகையாகக் காட்டப்பட்டிருந்ததுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 8,880,369,033 ஆக இருந்ததன் காரணமாக ரூபா 1,436,713,269 தொகையால் இணங்கியிருக்கவில்லை. | அமைச்சினால் ஏனைய செலவுத் தலைப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட போதிலும் நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. அதன் காரணமாக நிதி செயலாற்றல் கூற்றையும் காசுப்பாய்ச்சல் கூற்றையும் செம்மையாக்கியதன் அடிப்படையில் கிடைக்கப் பெற்றுள்ள மிகைப் பெறுமதியானது கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | ஏனைய திணைக்களங் களால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் இணக்க கூற்றில் தெளிவாக இனங்காணக் கூடிய வகையில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 06 செலவு விடயங்களின் ரூபா 2,800,000 தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள கொள்கை ரீதியான தீர்மானங்களின் பிரகாரம் மூலதனச் செலவுகள், கட்டுப்படுத்தப்பட்டதனால் அச்செலவு விடயங்களின் நிதி ஏற்பாட்டில் சேமிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. | தேவைப்பாட்டினை முறையான இனங்கண்டு பாதீட்டு மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) 08 செலவு விடயங்களின் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,709,793,000 தொகையாக இருந்ததுடன் அதில் ரூபா 955,590,783 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அந்த | 2020 ஆம் ஆண்டின் போது இடைக்கால அங்கீகரித்த 04 கணக்குகளின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து மீண்டுவரும் செலவுகளை | சேமிப்புக்களுக்கான தகுந்த காரணம் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேமிப்பு 08 சதவீதத்திலிருந்து 89 சதவீதம் வரையான வீச்சுடையதாகக் காணப்பட்டது. | மேற்கொண்டதன் பின்னர் செயற்திட்டத்தின் பெறுகை நடைமுறைக்காக நிதி ஏற்பாடு போதியதாக இல்லாததனால் அந்த ஆண்டினுள் பெறுகை நடைமுறைகளை முழுமையாக நிறுத்தி வைக்க வேண்டி ஏற்பட்டது. மேலும் ஊழியர்கள் வேலையை விட்டு விலகுதல், ஆட்சேர்ப்புக்கள் தாமதமடைதல், திட்டமிட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்படாமை, கொடுப்பனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதில் தாமதம், இறுதி விலைப் பட்டியல்கள் கிடைக்காமை, கொவிட் தொற்று நோய் நிலைமை ஆகிய விடயங்களின் காரணமாக செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியாமையின் அடிப்படையில் சேமிப்புக்கள் ஏற்பட்டன. | |
| (இ) | கொழும்பு நகர்ப்புற புகையிரதத்தின் செயற்திறனை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 2,207,209,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அதில் ரூபா 414,873,553 மாத்திரம் செலவு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாடுகளின் ரூபா 1,792,335,447 குறைந்த பயன்பாடு அவதானிக்கப்பட்டது. | 2019 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் REIP இற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் 2020-07-15 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும், 2020 யூலை மாதத்திலிருந்து பொதுத்திறைசேரியினால் நியமிக்கப்பட்ட செயற்திட்ட மதிப்பீட்டுக் குழுவினால் செயற்திட்டத்தை மதிப்பீடு செய்வதற்கு நியமித்தமை மற்றும் பொதுத் திறைசேரி செயலாளரின் ERD/IRCPRS/GEN/10 | ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் பணத்தை தாமதமின்றி செயற்திறனாக உரிய செயற்பாடு களுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆம் இலக்க 2020 யூலை 08 ஆந் திகதிய சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் அனைத்து ஒப்பந்தங்களை வழங்குதலும் உடன்படிக்கைகளில் கையொப்பமிடுதலும் நிறுத்தி வைக்கப்பட்டன. அதன் காரணமாக கேள்விக் குழு கூடுதலும் இடம்பெறவில்லை. இதன் காரணமாக பிரதான 02 நிர்மாண ஒப்பந்தங்களின் பெறுகை நடைமுறைகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடிவுறுத்த முடியாதிருந்தது. | |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2021 சனவரி மாதம் 07 ஆந் திகதிய CP20/2095/312/025 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் வழங்கப்படுகின்ற ஆலோசனை சேவைகளுக்கான கால எல்லையை நீடித்து அதற்காகச் செலுத்த வேண்டிய மேலதிகச் செலவுகளாக ரூபா 25,865,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்தும் இப்பொறுப்புக்களானது பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (i) (குறிப்பு iv) ரூபா 25,000,000 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக மொத்த பொறுப்புக்கள் ரூபா 865,000 குறைந்து பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | தவறுதலாக கணக்குகளை நாளதுவரையாக்குவதற்காக அப்பெறுமதியினை வழங்குவதற்கு முடியாதிருந்தது. ரூபா 25 மில்லியனுக்கு மேலதிகமாக இன்னும் ரூபா 865,000+VAT பணத்தை பொறுப்புக்களாக உள்ளடக்குதல் வேண்டும். | நிர்ணயிக்கப்பட்ட வாறு பொறுப்புக்களை இனங்கண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சேவையை கைவிட்டுச் சென்றுள்ள 03 உத்தியோகத்தர் களிடமிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 398,702 கடன் மீதியை அறவீடு செய்வதற்கு அமைச்சிற்கு முடியாதிருந்தது. | விரைவாக நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2012 ஆம் ஆண்டின் போது வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டதிலிருந்து ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்ய வேண்டிக் காணப்பட்ட ரூபா 121,945 கடன் மீதி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்பு | | | |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப்பிரமாணம் இலக்கம் 104(3) மற்றும் (4) ஆம் பிரிவுகள் | 06 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(3) இன் பிரகாரம் விசாரணை | போக்குவரத்து விடயத்திற்குரிய அமைச்சு பல சந்தர்ப்பங்களில் ஏனைய அமைச்சுக்களுடன் | நிதிப்பிரமாணம் மற்றும் பெற்றுக் கொள்ளப் பட்டுள்ள |

நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக அந்த விபரங்கள் நிதிக் கூற்றுக்களில் காட்டப் பட்டிருக்கவில்லை. முன்னைய மூன்று ஆண்டுகளில் 8 வாகனங்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 368,819 தொகை நட்டத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் பதிவழிக்கப்பட்ட மீதியாகக் காட்டப்பட்டிருந்தது. மேலும் நிர்ணயிக்கப்பட்ட வேளைக்கு உரிய அறிக்கைகள் வழங்கப்படாமையின் காரணமாக 2016 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையான நட்டங்கள் மற்றும் சேதங்கள் சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுத்தல் தாமதமடைந்திருந்தது.

ஒருங்கிணைக்கப்பட்டமை, மீண்டும் பிரிக்கப்பட்டமை முதலிய காரணங்களின் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை நிர்ணயிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக 2016 ஆம் ஆண்டிலிருந்து அடுத்துவரும் ஆண்டுகளில் இடம்பெற்றுள்ள வாகன விபத்துக்கள் சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கும் போது தடைகள் ஏற்பட்டுள்ளன எனக் குறிப்பிடுகின்றேன்.

அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

#### (அ) கொழும்பு நகர்ப்புற புகையிரத செயற்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (i) கொழும்பு நகர்ப்புற புகையிரத செயற்திட்டம் தொடர்பாக அத்துமீறிய குடியிருப்பாளர்களை மீண்டும் குடியிருக்கச் செய்தல் மற்றும் காணிகளைப் பெற்றுக் கொள்ளல் நடைமுறை சம்பந்தமாக 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை 2036 வீடுகளில் மீளக் குடியமர்த்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 386 வீடுகளில் மாத்திரம் மீளக் குடியமர்த்துதல் இடம்பெற்றிருந்தது. மேலும் காணிகளை பெற்றுக் கொள்ளல் கட்டளைச் சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் 454 காணித் துண்டுகளுக்காக அதிகாரப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தும் அதன் 05 ஆம் பிரிவின் கீழ் 02 காணித் துண்டுகளுக்காக மாத்திரம் அதிகாரப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தன. அவற்றிற்கு மத்தியில் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு இறுதியளவில் அத்துமீறிய குடியிருப்பாளர்களை மீளக்குடியமர்த்துதல் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | நகர அபிவிருத்தி அதிகார சபை வழங்கிய 454 வீடுகளில் 220 குடும்பங்களை குடியமர்த்துதல் தற்பொழுது முடிவுறுத்தப்பட்டுள்ளது. இன்னும் 32 குடும்பங்கள் இச்சிக்கலான காலப்பகுதிக்குப் பின்னர் குடியமர்த்தப்படுவார்கள். கொழும்பகே மாவத்தை மற்றும் காலிங்க மாவத்தையில் வீடுகளை நிர்மாணித்தல் முடிவடைந்ததற்கு இணங்க 2021 ஆம் ஆண்டின் போது 471 குடும்பங்களை குடியமர்த்த ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது. இதற்கிணங்க திறைசேரி பணம் வழங்குதல் நகர அபிவிருத்தி அதிகார சபை வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் செயற்திட்டத்தில் குடும்பங்களை மீளக் குடியமர்த்துதல் சமனான தன்மையில் அமுல்படுத்தப்பட்டது. அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ள முழுப்பணமும் இன்று வரை முழுமையாக வழங்கி முடிவுறுத்தப்படவில்லை. 2021ஆம் ஆண்டிற்காகவும் ரூபா 1525 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் பின்னர் எஞ்சியிருக்கும் பணத்தையும் 2022 ஆம் | பாதீட்டு நிதி ஏற்பாட்டினை முறைப்படி செயற்திறனாக உரிய செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டின் போது வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. களணி பழைய புகையிரத பாலத்தை மீள நிர்மாணிக்கும் போது 25 குடும்பங்களுக்கு அண்மித்த அளவானவர்களை மீளக் குடியமர்த்துவதற்காக இந்நிதியைப் பயன்படுத்துவதற்கு 2021 ஆம் ஆண்டில் (2021-01-19 ஆந் திகதிய அமப/20/2003/312/023) ஆம் இலக்க) சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. | |
| (ii) | கொழும்பு நகர்ப்புற புகையிர செயற்திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்ட சாத்திய வள ஆய்வு அறிக்கையானது காலரீதியாக ஆலோசனை (Dhowa) கம்பனியால் செயற்திட்டத்திற்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் காலதாமதத்துடன் செயற்திட்டத்திற்கு அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 03 வரைபு இறுதி அறிக்கைகளும் இறுதி அறிக்கையும் மீளாய்வாண்டின் இறுதி வரை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | விபரமான விடயங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் போக்குவரத்து அமைச்சுக்கும் சமர்ப்பிக்கப்பட்டு 2021 சனவரியிலிருந்து 2021 ஏப்ரல் வரையான காலம் வழங்கி (மேலதிக செலவுகள் இல்லாது காலத்தை நீடித்தல்) இறுதி அறிக்கைகள் அனைத்தும் பெற்றுக் கொள்ளப்பட்டன. | உடன்படிக்கை செய்யப்பட்டுள்ள வாறு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். |

**(ஆ) குருணாகல் ஹபரன ஊடாக புகையிரத வீதி - செயற்திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| குருணாகல் ஹபரன புகையிரத செயற்திட்டத்தின்கீழ் 2010 ஆம் | செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டிலிருந்தே | செயற்திட்டத்தை ஆக்கபூர்வமாக |

| | | |
|---|---|---|
| ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலத்தில் உள்நாட்டு நிதி மூலங்களின் கீழ் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,332,757,000 நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் காலப்பகுதிக்குள் அந்நிதியிலிருந்து ரூபா 144,433,309 தொகை அதாவது ஒட்டுமொத்த நிதி ஏற்பாட்டில் 13.08 சதவீதம் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. | செயற்திறனாக நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்ததுடன் அதன் போது விஞ்ஞான ரீதியான ஆய்வு மற்றும் மண் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அரசாங்கத்திற்கு செலவு ஏற்படாத வகையில் அச்செயற்பாடுகள் கடப்பாடுகள் இன்றி ஒரு வெளிநாட்டுக் கம்பனியின் மூலம் நிறைவேற்றப் பட்டதனால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. காணியை பொறுப்பேற்கும் நடவடிக்கை 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இழப்பீடு செலுத்தும் நடவடிக்கைக்காக இழப்பீட்டு விசாரணைகளை நடாத்துதலை 2020 ஆம் ஆண்டின் கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக நிறைவேற்ற முடியாதிருந்தது. | நிறைவேற்ற வேண்டிய வகையில் மதிப்பீட்டின் குறைந்த பயன்பாட்டினை குறைத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பொருள் மீளாய்வின் போது ஏற்பட்ட பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் சம்பந்தமாக பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களால் விளக்கமளித்து மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள முடியாத பொருட்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் சம்பந்தமாக தற்பொழுது விசாரணைகள் நடாத்தப்பட்டு அதற்காக பதில்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அதற்கிணங்க சரி செய்தல் மேற்கொள்ளப்பட்டது. உருவாகியுள்ள கொவிட் 19 நிலைமையின் அடிப்படையில் ஏல விற்பனை நடவடிக்கை சிறிது தாமதத்தை | நிதிப்பிரமாணம் மற்றும் கிடைத்துள்ள அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய அனைத்து சொத்துக்களுக்கும் பாதுகாப்பினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | ஏற்படுத்தியிருந்தும் முடியுமான அளவு விரைவாக கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | எடுத்தல் வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கொழும்பு நகர்ப்புற புகையிரதத்தின் செயற்திறனை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் தாமதக் கட்டணமாக ரூபா 34,353,893 தொகை ஆகிய அபிவிருத்தி வங்கிக்குச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டத்தின் கொள்வனவு சம்பந்தமான செயலாற்றலை மதிப்பீடு செய்யும் போது 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை நாடளாவிய தொலைத்தொடர்பு செயற்திட்டத்தை மாத்திரம் ஆரம்பிக்கக் கூடியதாக இருந்தது. | தொழில்சார் சங்கங்களினால் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தமை, அமைச்சு மாற்றமடையும் காலத்தில் ஏற்படுகின்ற தாமதம் கொவிட் 19 இன் காரணமாக ஏற்படுகின்ற தாமதம், அரசாங்கத்தினால் 5 மாத காலத்திற்கு உடன்படிக்கையில் கையொப்பமிடுதல் சுற்றறிக்கையின் மூலம் நிறுத்தி வைத்தல் ஆகிய செயற்திட்டத்திற்குப் புறம்பான காரணங்களால் தாமத கட்டணமாக ரூபா 34,455,893 தொகையை செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | நிதியை முறையாக முகாமைத்துவம் செயற்வதன் மூலம் தாமதக் கட்டணத்தை செலுத்துவதனை குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும். |

**4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக அமைச்சினால் உரிய இலக்குகளை இனங்காண்பதற்கும் அவற்றை அளவீடு செய்வதற்கும் தேவையான வரையறைகளை இனங்காண்பதற்கும் சரியான தரவு அடிப்படை காணப்படுதல் | அமைச்சின் மூலம் அபிவிருத்தி செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாததுடன் இணைந்த நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காணல் மற்றும் அது தொடர்பான வரையறைகளை இனங்கண்டு அபிவிருத்தி |

| | | |
|---|---|---|
| அத்தியாவசியமானதாக இருந்த போதிலும் நிறுவனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதனை அளவீடு செய்வதற்காக சரியான தரவு அடிப்படையினை உருவாக்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல், செயல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. அதன் காரணமாக அமைச்சிற்காகத் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுகின்ற திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் குறிப்பிடப்படாததுடன் செயற்திட்டத்தை அமுல்படுத்துகின்ற அமைச்சின் இணைந்த நிறுவனங்கள் மற்றும் செயற்திட்டத்தை அமுல்படுத்துகின்ற செயற்திட்ட அலுவலகங்களின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உரிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் குறிப்பிடப்பட்டிருந்தும் உரிய வரையறைகள் இனங்காணப்படவில்லை. 2021- செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது மேற்கூறிய குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் செயலாற்றல் குறிகாட்டிகள் (Key Performance Indicators) உள்ளடக்கப்பட்டுள்ளன. | திட்டங்களை அமுல்படுத்த வேண்டியதுடன் அது தொடர்பான தரவு அடிப்படை யினையும் உருவாக்குதல் வேண்டும். |